MALA S.A.R.L.
78, Boulevard Barbès
75018 PARIS



# தமிழ் முரசு

அனைத்து இயக்கங்களும் இணைந்து போராடுவோம்

முரசு : 3 ஒலி : 4

TAMOUL MOURASSOU

மாசி 1985

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரசின் பார்வையில்




தமிழ் முரசு-40

## நண்பர்களே இணைந்து காண்போம்!
## நமக்குள்ளே உடன்படுவோம்!

ஈழப்போராட்டம் இன்று ஓர் புதிய நிலைக்கு வந்துவிட்டது. ஈழமக்களின் பிரச்சனை தொடர்பாக சிறிலங்கா அரசு இதுவரைகாலமும் போட்டுவந்த முகமூடிகள் யாவற்றையும் கழட்டியெறிந்து ஈழமக்களுடன் போர் ஒன்றை ஆரம்பித்துவிட்டது. இதுவரைகாலமும் சிறிலங்கா அரசியல்வாதிகளால் ஜபிக்கப்பட்டு வந்த 'அரசியல் தீர்வு' என்ற வார்த்தைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு 'பயங்கரவாதத்திற்கு (?) தீர்வு கண்ட பின்னரேயே இனி எந்த பேச்சுவார்த்தைகளும்' என்று துப்பாக்கிகளின் மீது கை வைத்து சிறிலங்கா அமைச்சரவை பகிரங்கமாகவே சத்தியம் செய்துவிட்டது. தமிழர் கூட்டணியினர் இதுவரைகாலமும் காட்டிவந்த வட்ட-சதுர மேசை மாநாட்டு மாயா ஜாலக் காட்சிகளின் திரைகள் இழுத்து மூடப்பட்டு விட்டன.

விளைவு - ஏற்கனவே ஆக்கிரமிப்புப் படையினரின் அடக்குமுறைத் தீயில் வெந்து கசிந்த ஈழமக்களின் வாழ்வு சாவை நோக்கி வெகு வேகமாகத் தள்ளப்படுகிறது. இதுவரைகாலமும் உரிமை இல்லாதவர்களாக இருந்த மக்கள் இன்று உணவில்லாமல் இறக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். தினமும் எண்ணற்ற உயிர்கள், உடமைகள், உயிரிலும் மேலான ஈழப் பெண்களின் கற்புக்கள் வேட்டை நாய்களாய் உறுமிக்கொண்டு ஈழவீதிகளில் வலம் வரும் ஆக்கிரமிப்புப் படையினரால் சூறையாடப்படுகின்றன. பச்சைப் பாலகர்களாயிருந்தாலென்ன, படுக்கையிலிருக்கும் முதியவர்களாயிருந்தாலென்ன, ஆண், பெண் பேதமின்றி தொடர்ச்சியாக உயிர்கள் பறிக்கப்படுகின்றன. நரபலி வேட்டை தொடர்கிறது. இத்துடன் வெறிபிடித்த அரசு நின்றுவிடுகிறதா...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழப் பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை முடுக்கிவிட்டு இலட்சக்கணக்கான சிங்களக் குடும்பங்களை குடியமர்த்தும் திட்டத்தை ஆரம்பித்துவிட்டது. இதில் பலர் ஆயுதப்பயிற்சியளிக்கப்பட்ட அரசின் காடையர்களாகும். திட்டமிட்ட நடவடிக்கைகளின் மூலம் ஈழமக்களின் - மீன்பிடி - விவசாயம் - வர்த்தகம் அனைத்தையும் பாழ்படுத்தி - ஈழப்பொருளாதாரத்தை துவம்சம் செய்துவிட்டது. ஈழவிடுதலை இயக்கங்களிடையே பிளவையும், மக்களுக்கும் - இயக்கங்களுக்குமிடையே பேதத்தையும் ஏற்படுத்தும் தீராத முயற்சியில் ஆக்கிரமிப்பு அரசு தற்போது ஈடுபட்டுள்ளது.

இந்த நிலையில் ஈழவிடுதலை இயக்கங்களின் தலையில் ஒரு வரலாற்று முக்கியம் வாய்ந்த கடமை வைக்கப்பட்டிருக்கிறது. உயிர்களைப் பணயம் வைத்து ஈழப்போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் விடுதலை அமைப்புக்கள் ஈழமக்கள் தமது இறுதி மூச்சை விடுவதற்குத் திணறும் இந்தக் கட்டத்திலாவது ஒரு பொது அமைப்பிற்கு உடன்பட வேண்டும். ஒரு புரட்சிகரக் கட்சியமைப்பைத் தோற்றுவிக்கவேண்டும். ஈழமக்களுக்காகப் பேசும் உரிமையை தங்கள் கரங்களில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அதுமாத்திரமல்ல சர்வதேசரீதியாகவும் தமது நிலைப்பாட்டைப் பகிரங்கப்படுத்திக் கொள்ள வேண்டும். எப்படி சிறிலங்கா அரசு உலக ஏகாதிபத்திய அரசுகளை தனது நண்பர்களாக இனங்கண்டு ஈழப்போராட்டத்தை நசுக்குவதற்கான சகல உதவிகளையும் பெற்றுக்கொள்ள ஆரம்பித்துவிட்டதோ அதுபோல நாமும் ஒடுக்கப்பட்ட மக்களின் நண்பனும், உலக விடுதலைப் போராட்டங்களின் உற்ற சக்தியுமான சோவியத் யூனியனுக்கு சார்பான எமது நிலைப்பாட்டை பகிரங்கப்படுத்தி சுயமான எமது அரசியற் செயற்திட்டங்களினூடு ஈழப்போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும். நண்பர்களை இனங்காண்பதிலும், நமக்குள் உடன்பாடு வருவதிலும் ஏற்படும் தாமதம் ஆயுதப்போராட்டத்தையே விழுங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழ மக்கள் இன்னும் இரத்த வெள்ளத்தில்



இரத்தவெறி பிடித்து அலைகின்ற சிறிலங்கா வெறிநாய்கள் கூட்டம் ஈழதேசத்தில் நடாத்தும் தேடுதல் வேட்டை இது.

ஈழதேசம் தொடர்ந்து இரத்த வெள்ளத்தில் மூழ்கிக்கொண்டே செல்கிறது. சிறிலங்கா இராணுவத்தின் துப்பாக்கி வேட்டுகள் மாத்திரம் இன்று ஈழமக்களைப் பலியாக்கவில்லை. ஆக்கிரமிப்பு அரசு திட்டமிட்டு ஈழப்பிரதேசத்தில் இன்று ஏற்படுத்தியிருக்கும் பஞ்சம் அதனால் விளைந்த பசி அனைத்துமே ஈழமக்களின் இறுதி மூச்சு தூரத்தைக் குறைக்கின்றன. அரசபடைகளின் அக்கிரமங்களும் அதனால் விளைந்த அவலங்களும் முடிவில்லா தொடர் சோகங்கள். அதை முடிந்தவரை இங்கு தொகுக்க முயல்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18.11.84 இல் கல்வியங்காட்டில் அரசபடையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இரு அப்பாவிகளின் உயிர்களைப் பலிவாங்கியது. இதே தினம் மினிபஸ் ஒன்று இராணுவத் துப்பாக்கிச் சூட்டுக்கு உள்ளாகியது. விளைவு ஒரு மாணவி உட்பட ஆறு அப்பாவி உயிர்கள் துடிக்கத் துடிக்கப் பறிக்கப்பட்டன. 22.11.84 இல் நெல்லியடியில் கடைகளையும் வீடுகளையும் எரித்து அரச படையினர் வெறியாட்டம் நிகழ்த்தியபோது அங்கிருந்தவர்கள் இருவரையும் உயிரோடு எரித்து அக்கிராமத்திற்கே எண்ணெய் ஊற்றினர். 29.11.84 அன்று யாழ் நகரில் ஆனந்தராஜா என்பவர் இராணுவத்தினரால் சுட்டு படுகாயத்துக்குள்ளானார். வெறிகொண்ட விசேட படையினர் மக்களை மாத்திரமல்ல மாடுகளையும் விட்டுவைக்கவில்லை. 7.12.1984 ஆலயத்தில் 60 பக்தர்களும் 8 இந்து மதகுருக்களும் இராணுவத்தால் கைது செய்யப்பட்டனர். 18.12.84 ல் 2000 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கைது செய்யப்பட்டு வதை முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டனர். 23.12.84 அன்று யாழ். வின்சா படமாளிகைச் சந்தியில் சிவராஜாவும் அவரது மூன்று வயது மகன் நிர்மலனும் ஆக்கிரமிப்புப்படையினரின் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாகினர். இச்சம்பவத்தில் மூவர் படுகாயமடைந்தனர். 24.12.84 இல் இருபாலையில் நடந்த இராணுவ அக்கிரமம் 3 உயிர்களை பலிவாங்கியது. இதில் ஒன்று 4 வயது மழலை. 31.12.84, 1.01.85 தினங்களில் அல்வாய், திக்கம், நாவலடி, இன்பருட்டி பகுதிகளில் கைது செய்யப்பட்ட 200 அப்பாவித் தமிழ் இளைஞர்களில் பலர் 15 வயதுடையவர்கள். 4.01.85 அன்று செம்மணியில் விறகு ஏற்றிக்கொண்டுசென்ற நாலுபேர் துடிக்கத் துடிக்க கொல்லப்பட்டனர். இதே தினம் யாழ். இந்துக் கல்லூரிக் கண்மையில் இராணுவத் துப்பாக்கிகள் சூரிய மோகன் உட்பட மூன்று உயிர்களைப் பறித்ததுடன் பத்துப்பேரை படுகாயத்துக்குள்ளாக்கியது. இதே தினம் டாக்டர். சிவஞானசுந்தரம் இராணுவத்தினரால் கடுமையாகத் தாக்கப்பட்டு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7.01.85 அன்று குப்பிளானில் இருவர் கொல்லப்பட்டார் 23 பேர் கைதுசெய்யப்பட்டனர். சிறீலங்கா அரசின் நடைவடிக்கையால் 2 இலட்சம் தமிழ் பேசும் மக்களின் தமது உறைப்பை இழந்து நிர்க்கதி நிலைக்கு தள்ளியுள்ளது.

யாழ்மாவட்டத்தில் மாத்திரமல்ல ஈழத்தின் ஒவ்வொரு அங்குல மண்ணிலும் அரசபயங்கர வாதம் வெறியாட்டம் ஆடுகிறது. 5.12.84 அன்று உடையார் புரத்திலுள்ள அம்மன் கோயிலில் அர்ச்சகர் கந்தையா பூசை செய்யும்போது அரசபடையினரால் துடிக்கத் துடிக்க சுட்டுக் கொல்லப்பட்டார். 10.12.84 அன்று திருநகரில் இராணுவம் குஞ்சுப்பிள்ளைகாந்தனின் தந்தையான சண்முகம் என்பவரையும் சந்தானம் எனும் தாயையும் சுட்டுக் கொன்றுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தில் 24 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 10,000 பேர் அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

6.01.84 அன்று மன்னார் - வங்காலையில் உள்ள தேவாலயத்தில் சிறீலங்கா இராணுவம் நிகழ்த்திய வெறியாட்டம் மிருகத்தனத்தின் உச்சக்கட்டமாகும். மேற்படி ஆலய மதகுரு வண. பிதா. பஸ்ரியன் உட்பட ஒரு வயதுமுதிர்ந்த பெண்மணியையும் மேலும் பலரையும் தேவாலயத்தில் வைத்தே சுட்டுக் கொன்றுவிட்டு வண. பிதாவின் உடலை இராணுவம் எடுத்துச் சென்றுவிட்டது. 19.12.84 அன்று வவுனியாவில் செல்வ சக்தி ஆலை உரிமையாளர் மயில்வாகனம் இராணுவத்தினராலும் சிங்களக் காடையராலும் கொல்லப்பட்டார். இச்சம்பவத்தின் போது இரு பெண்கள் கற்பழிக்கப்பட்டு அவர்களது நகைகளும் கொள்ளையடிக்கப்பட்டன. 5.01.84 இல் வவுனியாவில் 3 பெண்கள் உட்பட 4 பேர் இராணுவத்தால் கொல்லப்பட்டனர் 12 பேர் படுகாயமடைந்தனர். டிசம்பர் மாத 3வது வாரத்தில் மூதூரில் 7 பேர் இராணுவத்தால் கொல்லப்பட்டனர். 5.01.85 இல் எக்கிலம்பத்தில் இராணுவத் தேடுதல் வேட்டையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது இருபெண்கள் துடிக்கத் துடிக்க கற்பழிக்கப் பட்டனர். 20.12.84 அன்று கட்டைபறிச்சானில் இரு இளைஞர்கள் இராணுவத்தால் கொல்லப்பட்டனர். அவர்களது உடல்கள் ஆடல் பாடல்களுடன் இராணுவத்தால் பவனியாய் கொண்டுசெல்லப்பட்டது. திரியாயில் சிங்களக் காடையர்கள் கடைகள், வீடுகள், பாடசாலைக்கு தீமூட்டினர் - 9 தமிழர்கள் கண்டெடுக்கப்பட்டனர். 6.1.85 இல் மட்டுநகர்-ஒருயிருப்பில் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

யாழ். மாவட்டத்திலுள்ள பல பாலங்களும் மதகுகளும் மக்களுக்கு துன்பம் விளைவிக்கும் நோக்கில் இராணுவத்தால் வெடிகுண்டுகள் மூலம் தகர்க்கப்பட்டு இப்பழி ஈழ விடுதலைப் போராளிகளின் தலையில் சுமத்தப்பட்டது. ஆனல் போராளிகளோ பல இடங்களில் தகர்க்கப்பட்ட பாலங்களைச் சீர்ப்படுத்தி மக்களின் சிரமத்தைத் தணித்தனர். இராணுவ முகாம் அமைக்கப்பட இருந்த வல்லை அஸ்பத்திரிக் கட்டடமும் இளைஞர்களால் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டது. இராணுவம் மக்களுக்கு இழைத்துவரும் தொல்லை போதாது என்று யாழ். கடைகளில் பணம் செலுத்தாது பொருட்களை அள்ளிச் செல்லும் கொள்ளையையும் மேற்கொள்கிறது.

மட்டுநகர் கோட்டைக் கல்லாற்றில் 24.01.85 சிறீலங்கா பொலிஸ் அதிரடிப்படையினர் விஜயகுமார், இரவீந்திரன், விஜயராஜா, இராஜதுரை ஆகிய அப்பாவி இளைஞர்களை சுட்டுக் கொன்றனர். மண்டூரிலும் பொலிஸ் அதிரடிப்படையினர் பொதுமக்கள்மீது தாக்குதல் நடத்தினர். 14.01.85 அன்று கிளிநொச்சியில் சிறீலங்கா பொலிஸ் சார்ஜன்ட் சிறீபால மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்களால் குண்டுவீசிக் கொல்லப்பட்டார். 16.01.85 அன்று முள்ளியவளையில் இராணுவத்தினர் இரு பெண்கள் உட்பட 15 பேரைப் படுகொலை செய்தனர். 30.12.84 அன்று ஓமந்தையில் இராணுவம் இருவரை சுட்டுக் கொன்றது. 2.01.85 இல் ஓமந்தையில் இராணுவத் தேடுதல் வேட்டையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை சின்னப்பு (45வயது) மகன்கள் யோகேஸ்வரன் (18வயது), யோகேஸ் (13வயது) ஆகியோர் சுட்டுக்கொல்லப்பட்டனர். 11வயது மகன் படுகாயத்துடன் தப்பினான். இப்பகுதியில் துரையப்பா ரத்தினசபாபதி எனும் 26வயது இளைஞனும் சுட்டுக்கொல்லப்பட்டார். 2.01.84 பாசையூர் கடலில் இராணுவம் ஹெலிகொப்டரில் இருந்து சுட்டதில் 28வயதுடைய ஆசீர்வாதம் கொல்லப்பட்டார். முல்லைத்தீவில் 24.12.84 இல் இராணுவ வெறியாட்டத்தில் முன்னாள் யாழ். பல்கலைக்கழக மாணவ அவைத் தலைவர் கிறிஸ்கந்தராசா கொல்லப்பட்டார். 5.1.85 அன்று யாழ் பல்கலைக்கழகத்தை சுற்றிவளைத்த படையினர் 500 இளைஞர்களைக் கைது செய்தது. 9.01.85 அச்சுவேலியில் இராணுவத் தேடுதல் வேட்டையின் போது 11வயதுப் பாலகன் சந்திரபவன் கொல்லப்பட்டான். செல்வபாலகுமார் (14வயது), சந்திரலிங்கம் (34வயது) ஆகியோர் படுகாயமடைந்தனர்.

11.01.85 இல் யாழ். புனித மரியாள் தேவாலயத்தியில் 10க்கும் மேற்பட்ட சிலைகள் பாதிரியார் இருப்பிடத்தில் இருந்த இராணுவத்தால் உடைத்துப் போடப்பட்டன. அரசினால் ஆயுதம் வழங்கப்பட்ட சிங்களக் காடையர்கள் வவுனியாவில் கணபதிப்பிள்ளையையும் அவரது மகன் ஜெயகுமாரையும் சுட்டுக்கொன்றனர். 14.1.85 இல் கிளிநொச்சியில் பொலிஸ் ஜீப் மீது இளைஞர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் நான்கு பொலிசார் படுகாயமடைந்தனர். 17.01.85 அன்று மன்னாரில் 95 இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். இதே தினம் முள்ளியவளையில் இராணுவம் 14 பேரை கொன்று குவித்தது. இதில் சின்னான் (40வயது) - அன்னலட்சுமி (36வயது), குமாரசாமி (40வயது) - நித்யகுமாரி (30வயது) ஆகியோர் தம்பதிகள். இவர்களது கொலையால் இவர்களது ஆறு பிள்ளைகளும் அநாதைகளாக்கப்பட்டுள்ளனர். 4ம் திகதி இந்தியா தப்பிச் செல்ல படகொன்றின் மீது இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 18வயது யுவதி பலியானார். ஒருவர் படுகாயமடைந்தனர். இருந்தனர். இப்படகில் 23பேர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22.01.85 அன்று காலை 40 இளைஞர்களைக் கொண்ட ஒரு குழு காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் 5 இலட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்களை துணிகரமாக கொள்ளையடித்துள்ளனர். இதே தினம் இயக்கச்சியில் நடந்த இராணுவத் தேடுதலில் ஒருவர் பலியாகியுள்ளார். இருவர் படுகாயமடைந்துள்ளனர். கிளிநொச்சி கரடிப் போக்கைச் சேர்ந்த வி. மகாலிங்கம் (40 வயது), சிறீஸ்கந்தரூபன் (22 வயது) வட்டக்கச்சியைச் சேர்ந்த பேரின்பராசா (22 வயது) மருதபுரத்தைச் சேர்ந்த நாகராசா (26 வயது) கிளிநொச்சியைச் சேர்ந்த ரவி (16 வயது) ஆகியோர் அரசபடையினரால் கொல்லப்பட்டனர். பருத்தித்துறையிலும் 5 பேர் பலியாகினர். ஆனைக் கோட்டை உயரப்புலத்தில் நடந்ததோ இன்றுமொருவகையான சோகச் சம்பவம். தன்னுடைய 17 வயது மகன் விக்கினேஸ்வரன் பூஸா இராணுவ முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டதைக் கேள்வியுற்ற ஒரு தாய் அதிர்ச்சியுற்று மரணமானார். 22.01.85 அன்று கொக்காவிலுக்கு அண்மையில் 8 பஸ்கள் மறிக்கப்பட்டு அதில் பயணம் செய்த 100க்கு மேற்பட்ட தமிழ்ப் பயணிகள் இராணுவத்தினரால் கொடூரமாகத் தாக்கப்பட்டனர்.

23.01.85 அன்று வெள்ளவெளியில் போராளிகளால் மேற்கொள்ளப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலில் 3 பொலிசார் பலியாகினர். இருவர் படுகாயத்துக்கு உள்ளாகினர். வல்வெட்டித்துறையிலும் இராணுவத்தினர் மீது தாக்குதல் நிகழ்த்தி போராளிகள் உயிர்ச்சேதங்களை ஏற்படுத்தியுள்ளனர். 25.01.85 நள்ளிரவு துணிகரமாக மேற்கொள்ளப்பட்ட கொள்ளையொன்றில் ஹட்டன் நஷனல் வங்கியின் யாழ். கிளையிலிருந்து 5 கோடி ரூபாய் பெறுமதியான பணமும், நகைகளும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

ஈழ மக்களுக்கு இழைக்கப்பட்டு வரும் தாங்கொணா கொடுமைகள் தொடர்கின்றன. ஆனால் எத்துணை கொடுமை இழைக்கப்பட்டாலும் ஈழப் போராட்டத்தைக் கைவிடோம் என்ற அவர்களது உறுதி தினமும் வலுவடைந்தே செல்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உயர்ந்த மலைகளே............

ஓ! உயர்ந்த மலைகளே
நீங்கள் பச்சை பசேலென்று
எவ்வளவு பசுமையாகக் காட்சியளிக்கிறீர்கள்
இது வெறும் தூரத்துப் பச்சையல்ல
பொன்னும் பொருளும் உங்களில்தான் விளைகின்றன
குறையாத அமுதத்தை சுரக்கும் அட்சய பாத்திரங்களை
நீங்கள் ஆனந்தமாகச் சுமக்கின்றீர்கள்,
தேயிலை கோப்பி என்றும், றப்பர் கொக்கோ என்றும்
நீங்கள் எத்தனை அழகாக அலங்கரிக்கப்பட்டிருக்கிறீர்கள்
அந்த ஆனந்தத்தில்தான் நெடுந்துயர்ந்து
நிமிர்ந்து நிற்கின்றீர்கள்,
ஆனால்:—
உங்களை நிமிர்ந்து நிற்கச்செய்த எத்தனை உடல்களில்
கூனல் விழுந்திருக்கின்றன என்று உங்களுக்குத் தெரியுமா?
உங்களை அலங்கரித்த எத்தனை கைகள் இன்று
விலங்குகளால் கட்டப்பட்டிருக்கின்றன
நீங்கள் பசுமையாக செழிப்பதற்கு
எத்தனை உடல்கள் உரமாக்கப்பட்டிருக்கின்றன
நீங்கள் செழிப்பதற்கு எத்தனை மக்களது குருதிகள்
சிந்தப்பட்டிருக்கின்றன என்று தெரியுமா?
இவைகளொன்றும் உங்களுக்குத் தெரியப் போவதில்லை
ஏனெனில்:—
நீங்கள் உயர்ந்திருக்கிறீர்கள்
உயரத்தில் இருப்பவர்களுக்குத்தான்
தாழ்ந்திருப்பவர்களின் நிலை தெரிவதேயில்லை
ஆனால்:—
தாழ்ந்திருக்கின்ற அத்திவாரத்தினால்தான்
உயரமான கட்டிடங்களே உறுதியாக நிற்கின்றன
அத்திவாரத்தையே அசைத்துப் பார்க்கும்
புத்திமான்களும் இருக்கின்றார்கள்
அவர்கள்தான்:—
செழிக்க வைத்த உங்களை
நாடற்றவர்கள் என்று கூறி நகைக்கிறார்கள்
ஆனால்:—
சரித்திரம் தன் அத்தியாயத்தை எழுத ஆரம்பித்துவிட்டது
அடிமைச்சாசனமும், சரணடைவும் முற்றாக ஒழிக்கப்பட்டு
அவர்களும் உன்னைப்போல் நிமிர்ந்து நிற்கின்றார்கள் என்ற
அந்த பொன்னான வாக்கியமும்
பொறிக்கப்பட்டிருக்கும்

"அருந்ததி"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழ தமிழக சிறீலங்கா செய்திகள்

## ஆக்கிரமிப்பு சிறீலங்கா இராணுவத்துக்கு எதிரான தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் பெரும் தாக்குதல்.

சாவகச்சேரி, கைதடி தாக்குதல்கள் மூலம் சிறீலங்கா அரசுக்கு பெரும் கலக்கத்தை விளைவித்த தமிழ் ஈழ விடுதலை இயக்கம் தனது அடுத்த இராணுவத் தாக்குதல் மூலம் சிறீலங்கா இராணுவத்திற்கு பேரழிவையும், பீதியையும் ஏற்படுத்தியுள்ளது. 19.01.1985 அன்று மேற்படி றெலோ இராணுவம் முருகண்டிக்கும் மாங்குளத்திற்குமிடையில் கண்ணிவெடிப் பொறியமைத்து, கொழும்பினை நோக்கிச் சென்ற புகையிரதம் தகர்க்கப்பட்டதில் அதில் பயணம் செய்த 225க்கும் அதிகமான சிறீலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் இச் சம்பவத்தின் பின்பு ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து புறப்பட்டு வந்த இராணுவப் பிரிவு உமையாள்புரத்தில் எதிர்கொள்ளப்பட்டு தாக்கப்பட்டதில் 40க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் றெலோ பிரசாரம் தெரிவிக்கிறது. மேற்படி தாக்குதல்களின் பயனாக 160க்கும் மேற்பட்ட நவீனரக தன்னியக்கத் துப்பாக்கிகள், 52 மெசின் துப்பாக்கிகள், கைக்குண்டுகள் அடங்கிய 10 பெட்டிகள் போன்ற ஆயுதங்கள் றெலோ வீரர்களால் கைப்பற்றப்பட்டுள்ளன. மேற்படி புகையிரதத்தில் ஏறாதவாறு மக்கள் ஏற்கனவே இயக்கத் தோழர்களால் தடுக்கப்பட்டதால் மக்களுக்கு பெரும் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை. 12 புகையிரதப் பெட்டிகள் நாசமாக்கப்பட்டதால் சிறீலங்கா அரசுக்கு 3.8 மில்லியன் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனநாயக வழியில் அரசியல் தீர்வுக்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் - 20 தொழிற் சங்கங்கள் கூட்டாக வேண்டுகோள்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு ஜனநாயகரீதியில் அரசியல் தீர்வுகாண நடவடிக்கை எடுக்குமாறு இருபது தொழிற்சங்கங்கள் கூட்டாக அரசுக்கு அறைகூவல் விடுத்துள்ளன. இனப்பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கையின் வாயிலாக பரிகாரம் காண முடியாதென்றும், தற்போதைய இராணுவ நடவடிக்கையால் மனித உயிர்ச் சேதத்தையும், பொருளாதாரப் பளுவையும் மக்கள் எதிர் நோக்க வேண்டுமென்றும் கூட்டறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இக் கூட்டறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் மக்களுக்கு எதிரான பெருந்தனமான பயங்கரவாதங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. இதனை நாம் மிக வன்மையாகக் கண்டிக்கிறோம். எனவே அரசாங்கம் இத்தகைய நடவடிக்கைகளுக்கு உடனடியாக முற்றுப் புள்ளி வைக்கவேண்டும். இந்த நடவடிக்கைகளுக்கு எதிராக வடக்குக் கிழக்கிலுள்ள தொழிற்சங்கங்கள் மேற்கொண்டுவரும் பிரச்சாரங்களுக்கு நாம் பூரண ஆதரவு வழங்கி நிற்கிறோம். வடக்கு, கிழக்கு மக்களுக்கெதிராக ஆட்சியாளர்கள் இன்னு யுத்தம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர். அரசின் அடக்குமுறை நடவடிக்கைகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் தோட்டப்பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும் இதர பகுதிகளில் வாழ்கின்ற மக்களும் இதிலிருந்து தப்ப முடியவில்லை. சுருங்கச் சொல்லப் போனால் அரசின் அடக்குமுறைகள் நாடெங்கிலுமே வியாபித்துள்ளன. இதன்மூலம் பயங்கரமான மிகவும் ஆபத்தான சூழ்நிலை ஒன்று நாடெங்கும் ஏற்பட்டுள்ளது. நமது அடக்குமுறை நடவடிக்கைகளுக்கு பொதுமக்களையும் பங்காளர்களாக்க அரசு கைக்கொள்ளும் பாதுகாப்பு நிதி திரட்டலையும் நாம் கண்டிக்கிறோம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறீலங்கா பல்கலைக் கழகங்கள் அரசுக்கெதிராக போர்க்கொடி!

நேற்றுவரை தமிழ் பேசும் மக்களின் குரல்வளைகளை நெரித்து வந்த சிறீலங்கா அரசு இன்று சிங்கள மக்களின் கழுத்துக்களிலும் கையை வைத்துள்ளது. பல்கலைக் கழக மாணவர்களின் உரிமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் பல்கலைக்கழகத் திருத்தச் சட்டத்தை ஆட்சேபித்து சிறீலங்கா பல்கலைக் கழக மாணவர்கள் போர்க்கொடியை உயர்த்தியதை அடுத்து அரசு பல்கலைக்கழகங்களையும், கொழும்பு மாவட்டத்திலுள்ள பாடசாலைகளையும் மூடும்படி உத்தரவிட்டுள்ளது.

## அச்சுவேலி மோதலில் விடுதலைப் புலி இயக்க தோழன் ரவீந்திரன் வீரமரணம்!

அச்சுவேலியில் 9.01.1985 அன்று தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் முகாம் ஒன்று பெருந்தொகையான சிறீலங்கா இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்ட போது நடைபெற்ற கடும் மோதலில் விடுதலைப் புலி இயக்கத்தின் மத்தியகுழு உறுப்பினரும், ஆயுதப் பிரிவுக்குப் பொறுப்பானவருமான ரவீந்திரனும் மேலும் நான்கு தோழர்களும் வீரமரணமடைந்திருப்பதாக விடுதலைப்புலிகளின் செய்திக்குறிப்புத் தெரிவிக்கிறது.

## சிறீலங்கா அரசுக்கு எதிராக அமைச்சர் தொண்டமான் கண்டனம்!

இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பாக சிறீலங்கா அரசு ஒரு அரசியல் தீர்வைக்காண முயற்சிசெய்யவில்லை என்றும் மாறாக இராணுவத் தீர்வு ஒன்றின் மூலம் மக்களைக் கொன்றொழிக்கத் திட்டமிடுகிறது என்று சிறீலங்கா அமைச்சரவையின் அங்கத்தினரான தொண்டமான் சிறீலங்கா அரசைச் சாடியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியக் கடற்படை வீரர்களால் கைது செய்யப்பட்ட சிறீலங்கா கடற்படையினர் ஏழுபேரும் விடுதலை!

இந்தியக் கடல் எல்லைகளை மீறுவது இந்திய மீனவர்களைத் தாக்கி இந்திய மீனவர்களிடமிருந்து வலைகளையும், இறால்களையும், பணத்தையும் பறித்துக் கொண்டு தப்ப முயன்ற சிறீலங்கா கடற்படைப் படகொன்று ஏழு சிறீலங்கா கடற்படையினருடன் இந்தியக் கரையோரக் காவல்படையினரால் பற்றப்பட்டது. கைது செய்யப்பட்ட சிறீலங்கா கடற்படையினர் தொடர்ச்சியான இந்திய-சிறீலங்கா அரசுகளின் பேச்சுவார்த்தைகளின் பின்னர் சிறீலங்கா அரசு தான் ஏற்கனவே கைது செய்த இந்திய மீனவர்களை விடுதலை செய்ததையடுத்து விடுவிக்கப்பட்டனர். இருப்பினும் இந்தியக் கடற்படையின் இந்நடவடிக்கை சிறீலங்கா கடற்படைக்கு பெரும் பீதியை ஏற்படுத்தியுள்ளது.

## சிறீமாவோவிற்குப் பிறந்துள்ள புதிய ஞானம்.

தனது ஆட்சிக்காலத்தில் இனவாதத்துக்கு நீரூற்றி வளர்த்து அப்பாவித் தமிழ் இளைஞர்களை ஆண்டுக்கணக்காக சிறைவைத்து அவர்களைத் துப்பாக்கிகளைத் தூக்கவைத்த பெருமைக்குச் சொந்தக்காரியான முன்னாள் பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்காவிற்கு இப்போது புதிய ஞானம் பிறந்திருக்கிறது. சமீபத்தில் அவர் விடுத்த அறிக்கையொன்றில் "பயங்கரவாத ஒழிப்பு என்ற போர்வையில் அப்பாவித் தமிழர்கள் ஒன்றில் கொல்லப்படுகின்றனர். அல்லது கொடுமைப்படுத்தப்படுகின்றனர். தமிழ் இளைஞர்கள் அநியாயமாக பயங்கரவாதிகளாகக் கருதப்படுகின்றனர். வடக்கு, கிழக்கில் விவசாயம், மீன்பிடி அபிவிருத்தி ஆகியன பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது" என்று தனது அறிக்கையில் சிறீமாவோ தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழப் பிரதேசங்களில் தொடர்ந்து திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம்.

அங்குல அங்குலமாக பாலஸ்தீன மண்ணை விழுங்கி ஏப்பமிட்டு வரும் யூத சியோனிச இஸ்ரேல் போதனைகளைப் பின்பற்றி சிறீலங்கா ஆயுதப் பயிற்சியளித்து 30 ஆயிரம் சிங்களக் குடும்பங்களை ஈழப்பிரதேசத்தில் குடியேற்றும் தனது திட்டத்தை முடுக்கி விட்டுள்ளது. இதன் ஆரம்பகட்டமாக இராணுவப் பயிற்சி அளிக்கப்பட்ட 100 இளைஞர்கள் உள்ளடங்கிய 250 சிங்களக் குடும்பங்கள் முல்லைத் தீவில் – நாயாற்றுப் பகுதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். தொடர்ச்சியாக தமிழ்-சிங்கள இனங்களுக்கிடையே மோதலை ஏற்படுத்தி விரிசலை வளர்க்கும் தந்திரத்தை சிறீலங்கா அரசு முடுக்கி விட்டுள்ளது.

## ஈழ விடுதலை இயக்கங்களை ஒன்றுபடக் கோரி மதுரையில் பத்தாயிரம் மாணவர்கள் பேரணி!

ஈழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் அனைத்து விடுதலை இயக்கங்களும் தமது பேதங்களை மறந்து ஒன்றுபட வேண்டும் என்று கோரி 23.1.85 அன்று மதுரையில் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் பேரணி ஒன்றை மேற்கொண்டனர். இவ்வூர்வலத்தையடுத்து மதுரை தமுக்கம் மைதானத்தில் அமைந்திருந்த மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் பெருந்திரளான இளைஞர்களும், யுவதிகளும் கலந்து கொண்டனர்.

## கொலை வெறியன் லலித் அமெரிக்கா விஜயம்!

ஈழமக்களின் அறப்போரை அழிக்க கங்கணம் பூண்டு இராணுவ பலாத்காரத்தை கட்டவிழ்த்து விட்டிருக்கும் சூத்திரதாரி லலித் அத்துலத்முதலி விடுதலைப் போராளிகளின் தொடர்ந்த தாக்குதல்களால் கலங்கியவராக மேலதிக ஆயுதக் கொள்வனவிற்கும், ஆலோசனைக் கொள்வனவிற்கும் அமெரிக்க விஜயத்தை மேற்கொண்டுள்ளான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தோழர்களே!

வரலாறு ஈழமக்களை நெருக்கடியான கட்டமொன்றில் விட்டிருக்கும் இவ்வேளையில் 'தமிழ் முரசு' ஈழப் போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்க, உங்கள் உறுதிப்படுத்தலையும், ஆதரவையும் தந்து உதவுங்கள். சகல தொடர்புகட்கும்....

The Editor,
"TAMIL MURASU"
TAMIL EELAM LIBERATION COUNCIL,
10 rue des Martyrs, 75009 PARIS.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய தேசத்தில் சீ.ஐ.ஏ யின் நீசக்கரங்கள்




இந்திய தேசத்தில் சி.ஐ.ஏ.யின் நீசக்கரங்கள் அங்குலம் அங்குலமாய் படர்ந்து வருவது பற்றி நாம் அடிக்கடி குறிப்பிட்டிருந்தோம். அது இப்போது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. சி.ஐ.ஏ. மாத்திரமல்ல மேற்கத்திய முதலாளித்துவ நாடுகளும் தீவிரமாக உளவு வேலையில் ஈடுபட்டு வந்தது அம்பலமாகியுள்ளது. சமீபத்தில் இந்தியப் புலனாய்வுத்துறை ராஜீவ் காந்தியின் உத்தரவுக்கிணங்கி மேற்கொண்ட வேட்டை திடுக்கிடும் தகவல்களை அளித்தது மாத்திரமல்ல இத்தகைய உளவு வேலைகளில் ஈடுபட்ட பல உயர் அதிகாரிகளை கைது செய்யவும் வழிகோலியுள்ளது.

அமைச்சரவை அறிக்கைகள், புலனாய்வு மதிப்பீடுகள், பாதுகாப்புத் திட்டங்கள், ஆயுதக் கொள்வனவு, இலங்கை பற்றிய கொள்கையறிக்கை போன்ற மிக முக்கியத்துவமும் அந்தரங்கமும் வாய்ந்த 300 அறிக்கைகள் உளவில் ஈடுபட்ட துரோகிகளால் அம்பலப்படுத்தப்பட்டுள்ளன. இந்த சதி நடவடிக்கைகள் அம்பலமானதையடுத்து புதுடில்லியிலுள்ள பிரான்சுத் தூதரகத்தைச் சேர்ந்த பிரதி இராணுவ அதிகாரி உடனடியாக நாட்டுக்கு அழைக்கப்பட்டார். இன்னுமொரு பிரெஞ்சுப் பிரஜையும் இந்தியாவை விட்டு வெளியேறினார். இச்சம்பவம் குறித்து பிரான்சு கருத்து எதுவும் தெரிவிக்காத நிலையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவில் உள்ள பிரெஞ்சுத் தூதுவரும் பிரான்சு
க்கு அழைக்கப்பட்டது பிரான்சின் குற்ற நிலையை
நிரூபித்தது. இப்போது அடுத்த கேள்வி இவர்களுக்
கும் சி.ஐ.ஏ க்குமிடையே உள்ள தொடர்பு.
இதுதொடர்பாக ஆசிரியத் தலையங்கம் எழுதிய பிரான்
சின் பிரபல தினசரி 'லா மொண்ட்' இது பிரான்சுக்கு
விழுந்த பேரடி என்று குறிப்பிட்டதுடன் இவ்விவகாரம்
குறித்த சோசலிச அரசின் மௌனத்தையும் கண்டித்
துள்ளது. புதுடில்லியிலுள்ள 'பிரெஞ்சு அமைப்பு'
தனது பிரெஞ்சு எஜமானர்களுக்காக மட்டும்
வேலை செய்கின்றதா அல்லது அது பல்தேசிய
புலனாய்வு அமைப்பின் ஒரு அங்கமா என்ற கேள்வி
யையும் எழுப்பியுள்ளது. நீண்ட நாட்களாக
நடந்துவரும் இவ்வுளவு வேலைகளில் 'நேட்டோ'
அமைப்பைச் சேர்ந்த ஐந்து நாடுகள் சம்பந்தப்
பட்டுள்ளன.

இந்த உளவு விவகாரத்துக்கு அமெரிக்க
சி.ஐ.ஏ.வே பொறுப்பு என சோவியத் செய்தி நிறுவன
மான 'டாஸ்' குற்றம் சாட்டியுள்ளதையே நாமும்
எமது கருத்தாகப் பிரதிபலிக்கிறோம். இந்தியப்
பாதுகாப்புத் தொடர்பான எல்லா அம்சங்களை
குறித்தும் தகவல் பெறவும் இந்தியாவின் உறுதிப்
பாட்டைக் குலைக்கவும் சி.ஐ.ஏ. விரைந்துள்ள
தென இந்தியப் பத்திரிகைச் செய்திகளை மேற்
கோள் காட்டி டாஸ் கூறியுள்ளது. இந்தியாவில்
சி.ஐ.ஏ. நாசவேலைகளில் ஈடுபட்டதில் இந்த அரசியல்
ஊடுருவல் புதியனவோ அன்றி இறுதியானதோ அல்ல.
கடந்த காலங்களிலும் அமெரிக்கர்கள் இந்தியாவின்
உளவில் ஈடுபட்டிருந்த போது பிடிபட்டுள்ளனர் என
வும், உலக விவகாரங்களில் இந்தியா ஈடுபடுவ
தைத் தடுப்பதும் அதன் தலைவர்களின் கவனத்தை
உள்நாட்டுப் பிரச்சினைகளில் திசை திருப்புவதும்
இந்த உளவின் நோக்கம் என உண்மையான
நோக்கினை 'டாஸ்' வெளிப்படுத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவப்புக்கொடிகள் உயரப்பறக்கும் சிவப்புச் சூரியனின் கதிர்கள் பரவும்



கம்பூச்சிய எதிர்ப்புரட்சியாளர்களின் முகாம்களைத் தகர்த்தெறிந்து வெற்றியை முத்தமிட்டு சோவியத் டாங்கியில் பவனிவரும் கம்பூச்சிய-வியட்நாம் புரட்சிப் படையினர்....

கம்பூச்சியா — இந்தோசீனாவில் உயரப்பறக்கத் தொடங்கி விட்ட சிவப்புக் கொடிகளை எப்படியாவது இறக்கிவிட வேண்டும் அதன் மூலம் வியட்நாம், கம்பூச்சியா, லாவோஸ் மக்களின் புரட்சிகர அரசுகளைக் கவிழ்த்து தனது கைப்பொம்மைகளை ஆட்சிபீடத்தில் அமர்த்த வேண்டும் என்ற முழு முனைப்புடன் இன்று அமெரிக்க ஏகாதிபத்தியமும் அதனது சீனச் சகபாடிகளும், ஆசியான் கூட்டணியும் எதிர்ப்புரட்சிப் பரிசோதனைகளை தொடர்ந்து நிகழ்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும் நாடு. ஆனல் புரட்சியைக் காப்பாற்றும் வேகமும், ஏகாதிபத்தியத்துக்கெதிரான என்றும் ஓயாத போர்க்குணமும் கொண்ட வியட்நாமியப் புரட்சிப்படைகளால் இந்த எதிர்ப்புரட்சிச் சதிகள் தொடர்ந்து முறியடிக்கப்பட்டே வந்திருக்கின்றன. ஆறு ஆண்டுகளுக்கு முதல் கொடுங்கோலன், கொலைகாரன் பொல் பொட்டை ஆட்சிபீடத்திலிருந்து அகற்றியதுடன் வியட்நாமின் புரட்சிப்படைகள் ஓயவில்லை. இன்றுவரை கம்பூச்சியாவின் கம்யூனிச அரசாங்க பக்கதுணையாக இருந்து அரசுக்கு எதிரான எதிர்ப்புரட்சி தாக்குதல்களை முறியடித்து வருகின்றன. இம்முறை வியட்நாமிய கம்பூச்சிய துருப்புக்கள் இந்த எதிர்ப்புரட்சியாளர் முகாம்களின் மீது நிகழ்த்திய தாக்குதல்கள் உக்கிரமானது. இதில் கிட்டிய வெற்றி மகத்தானது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும் அதனது சகபாடிகளான சீன, மற்றும் ஆசியான் கூட்டணி நாடுகளினதும் கைக்கூலிகளாக எதிர்ப்புரட்சிகளை மேற்கொண்டுவரும் இந்த கைக்கூலிப்படைகள் மூன்று பிரிவுகளாகப் பிரிந்து கம்பூச்சிய-தாய்லாந்து எல்லைப்புறங்களில் முகாம்களை அமைத்து அங்கிருந்து கம்பூச்சியாவினுள் ஊடுருவி தாக்குதல்களை நிகழ்த்தி வருவன. இந்த எதிர்ப்புரட்சிக் குழுக்களில் முதன்மையானது KHMER ROUGE - இது சீனச் சதியாளரின் கைப்பொம்மைக் குழு. இக்கூலிப்படைகளுக்குத் தேவையான சகல ஆயுதங்களையும், நிதியையும் சீனாவே வழங்கிவருகிறது. இச் சதியாளர்களின் தலைவன் பொல் பொட் தன்னுடைய இரத்தம் தோய்ந்த கரங்களால் எழுதிய கொலை அத்தியாயத்தை கம்பூச்சிய மக்கள் என்றுமே மறக்கமாட்டார்கள். பொல் பொட்டின் ஆட்சிக் காலத்தில் கோரத்தனமாகக் கொல்லப்பட்ட கம்பூச்சிய மக்களின் எண்ணிக்கை 20 தொடக்கம் 30 இலட்சமாகும். கம்பூச்சியாவின கல்வி, பொருளாதாரம், சமூக நலன் அனைத்துமே கொடுங்கோலன் பொல் பொட்டினால் நிர்மூலமாக்கப்பட்டது. இரண்டாவது எதிர்ப்புரட்சிக் கும்பல் KPNLF - இதன் தலைவன் சொன் சான். சி.ஐ.ஏ யின் நேரடிக் கைக்கூலி. கடந்த காலங்களில் அமெரிக்க ஏகாதிபத்தியம் இப்பகுதிகளில் நடத்திய குண்டுவீச்சுகளுக்கும், படுகொலைக்கும் துணைசென்ற துரோகி. ஆசியான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டணி நாடுகளின் விசுவாசமான அடிவருடி. மூன்றாவது கூலிப்படைப் பிரிவு முன்னாள் மன்னராட்சி வாரிசான சிகானுக்கின் தலைமையில் இயங்கும் ஒரு சிறு பிரிவு. சிகானுக் — ஒரு கம்யூனிச விரோதி — மேற்கத்திய முதலாளித்துவச் சுரண்டலாளர்களின் நெருங்கிய கூட்டாளி — அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் விசுவாசி. சோவியத் யூனியனுக்குச் சார்பான கம்பூச்சிய, வியட்நாமிய, லாவோஸ் அரசுகளை கவிழ்ப்பதற்கான கருவிகளாக இந்தக் கூலிப்படைக் கும்பல்களை ஏகாதிபத்தியமும் அதன் சகபாடிகளும் பாவித்து வருகின்ற இந்தக் கட்டத்திலே தான்...

இந்தக் கைக்கூலிகளுக்கெதிராக வியட்நாம் படைகளின் துணையுடன் கம்பூச்சியப் படைகள் நவம்பர் மாதத்தில் தமது தாக்குதலை ஆரம்பித்தன. நொங் சமெத்திலுள்ள KPNLF இன் முகாம் தரைமட்டமாக்கப்பட்டது. தாக்குதல்கள் தொடர்ந்தன. எதிர்ப்புரட்சியாளர்களின் கோட்டையாகக் கருதப்பட்ட, KPNLF இன் தலைமைப் பீடம் அமைந்துள்ள அம்பில் முகாம் சோவியத் தயாரிப்புகளான T-54 டாங்கிகளில் பவனிவந்த வியட்நாமிய – கம்பூச்சியத் துருப்புக்களால் தரைமட்டமாக்கப்பட்டது. இங்கு வைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான வெடிமருந்துகளும், ஆயுதங்களும் புரட்சிப்படைகளால் கைப்பற்றப்பட்டன. கூலிப்படைகள் தாக்குதலின் உக்கிரம் தாளாது எல்லைகளை கடந்து ஓடி ஒளிந்தனர். இந்த எதிர்ப்புரட்சியாளர்களின் 'வீரம்' பற்றி முதலாளித்துவப் பிரச்சார சாதனங்கள் வரிந்து கட்டிக்கொண்டு செய்த பொய்ப்பிரச்சாரங்கள் தோலுரித்துக் காட்டப்பட்டன. புரட்சிப்படைகளின் வெற்றியை மூடி மறைக்க முயன்ற அத்தனை முதலாளித்துவச் சக்திகளும் தோற்கடிக்கப்பட்டன.

புரட்சிப்படைகளுக்குக் கிட்டிய வெற்றி தாங்கொணா வலியை ஏகாதிபத்தியத்துக்கும் அதன் எடுபிடிகளுக்கும் கொடுத்தது. விளைவு புரட்சிப்படைகளுக்கெதிரான பொய்ப்பிரச்சாரத்தை கட்டவிழ்த்து விட்டனர். வியட்நாம், கம்பூச்சியப் படைகளின் தாக்குதல்கள் ஆயிரக்கணக்கான கம்பூச்சிய மக்களை அகதிகளாக்கிவிட்டது என [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணீர் வடித்தனர். இதில் வெட்கக்கேடு என்னவென்றால் இலட்சக்கணக்கான மக்களை பொல்பொட் கொலை வெறியன் கொன்றழித்தபோது வாய் மூடி மௌனித்திருந்தவர்களும், வியட்நாம் குண்டுகளை வீசி எண்ணற்ற உயிர்களை சூறையாடி, எண்ணற்றோரை அங்கவீனர்களாக்கி அமெரிக்க ஏகாதிபத்தியம் அக்கிரமங்களைக் கட்டவிழ்த்தபோது அறந்தற்றிப் போனவர்களும் இன்று மக்கள் எவரும் பாதிக்கப்படாமல் இருக்கும் போது அவலக் குரல் எழுப்பி ஓலமும் போடுகிறார்கள். முதலாளித்துவப் பத்திரிகைகளும், தொலைக்காட்சிச் சேவைகளும் 'கண்ணீர்க் கதைகளை' பொய்யாய் புனைந்து அரங்கேற்றுகின்றன.

கம்பூச்சியாவிலே ஏகாதிபத்தியத்துக்கு ஏற்பட்டிருக்கும் தோல்வி அதனை இன்று சோவியத் யூனியனுக்கெதிரான உலகளாவிய ஒரு பொய்ப்பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்துவிடத் தூண்டியுள்ளது. வியட்நாம் - ஆயிரக்கணக்கான தொன் நேபாம் குண்டுகளை இந்தோசீனாவில் தூவி எண்ணற்ற சேதங்களையும், சோகத்தையும் விளைவித்த அமெரிக்க ஏகாதிபத்தியம் இன்று மனித உரிமைகள் பற்றி பேசுகின்ற வேடிக்கை நிகழ்கிறது. எப்படியாவது இப்பிரதேசத்தில் சோவியத் யூனியனுக்கு இருக்கின்ற ஆதரவை முறியடித்து தமது ஆயுத சர்வாதிகாரத்தை ஆட்சிப்பீடத்தில் ஏற்றவேண்டும் என்ற அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும் சீனச் சதியாளர்களினதும் ஒன்றிணைந்த சதிகள் இன்று சோவியத் யூனியனுக்கெதிராகவும் அதன் நேச அரசுகளான வியட்நாம் - கம்பூச்சிய அரசுகளுக்கெதிராக கட்டவிழ்த்து விடப்பட்டபோதிலும் சிவப்புக் கொடிகள் இந்தோசீனத்தில் உயரப் பறப்பதையும் சிவப்புச் சூரியனின் கதிர்கள் இப்பிரதேசத்தில் பரவுவதையும் எந்த எதிர்ப்புரட்சிச் சதிகளாலும் தடுத்துவிட முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழிக் கொலைகள்! செய்தி அலைகள் சில குழப்பங்களின் விழிப்பு

இலங்கையில் நடைபெறும் அரசபயங்கரவாதம் நாளுக்கு நாள் புதிய பரிமாணங்களைப் பெற்று வருகிறது. இது, சர்வதேச முதலாளித்துவ சக்திகளின் ஆதரவும், ஊக்கமும் சிறீலங்கா அரசிற்கு எந்த அளவிற்குக் கிடைத்து வருகின்றது என்பதற்கு ஒரு சான்று.

மனிதாபிமானத்திற்கு எப்பொழுதாவது சாவு மணி அடிப்பதுதான் சிறீலங்கா இராணுவத்தின் நோக்கம். கடந்த மார்கழியில் - தமிழ்ப் பிரதேசங்களில் நடைபெற்ற படுகொலைகள் இதனை நிரூபிக்கின்றன.

தமிழ் பேசும் மக்களுக்கு மார்கழி ஒரு விசேடமான மாதம். ஆனால் 1984 மார்கழியில் இலங்கையின் தமிழ்ப் பிரதேசங்களில் வழமையான மகிழ்ச்சி அங்கு பாயவில்லை. மாறாகப் பீதியும் பதட்டமும், அழுகையொலியுமே தமிழ்ப்பகுதிகளை ஆக்கிரமித்திருந்தன.

குறிப்பாக மார்கழிக் கொலைகள் மறக்கமுடியாதவை. மக்களின் மனங்களில் மாறாத வடுக்களாய் பதிந்தவை. குழந்தைகள், சிறுவர்கள், இளைஞர்கள், பெண்கள், முதியோர் என சகலதரப்பினரதும் உயிர்கள் பலியெடுக்கப்பட்டிருக்கின்றன. அரசபயங்கரவாதத்திற்குப் பலியான இந்த அப்பாவி மக்கள் அத்தனை பேரும் - சிறீலங்கா அரசின் 'பார்வையில்' பயங்கரவாதிகள்.

அத்தோடு இரு கிறீஸ்தவ மதகுருமாரும் அரசாங்கத் தரப்பால் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண. பிதா. ஜெயராசலிங்கம். இவர் காட்டுக்குள் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். மற்றவர் வண. பிதா பஸ்தியன். இவரின் சடலம் இன்னமும் கண்டுபிடிக்கப் படவில்லை. அரச பார்வையில் வண. பிதாக்களும் பயங் கரவாதிகளே.

ஆனால்... வத்திக்கானின் பார்வையில்....? வண பிதாக்களின் மறைவையொட்டி உலக கிறீஸ்தவ தலைமைப் பீடமான வத்திக்கான் ஒரு அநுதாப கண்டன வார்த்தையைக் கூட விடவில்லை. இது ஒடுக்கப் பட்ட மக்களின் விடுதலைப் போராட்டங்களுக்கு எதிரான, அடக்குமுறை ஆட்சியாளர்களுக்கும், முதலாளித்துவத்திற்கும் பக்கதுணையான வத்திக்கானின் உண் மை நிலையை தோலுரித்துக் காட்டியுள்ளது.

வத்திக்கான் மாத்திரமல்ல சர்வதேசச் செய் தித் தொடர்புச் சாதனங்களும் கூட மதகுருக்களின் கொலையை மூடி மறைத்து செய்தித் தொடர்புத் துறை என்பது இன்று முதலாளித்துவத்தின் பரிபூரண ஆளுமைக்கு உட்பட்டுள்ளது என்பதை நிரூபித்து ள்ளன. போலந்தில் கொலையுண்ட மதகுரு பொப்பிலு ஸ்கோவிற்காக சந்தையாய் கண்ணீர் வடித்து பக்கம் பக்கமாய் படம் போட்டு விசாரணை பற்றிய செய்தி களை வசனம் வசனமாய் பிரசுரித்தவையும் உலகப் பத்திரிகைகள். ஒடுக்கப்பட்ட ஈழ மக்களின் அங் கங்களான மதகுருக்கள் கொல்லப்பட்டதை மூடி மறைத்து தமது வர்க்க நிலைப்பாட்டை பேணிக் காத்துவிட்டன.

இதே வேளையில் மார்கழிக் கொலைகள் தொடர்பாக சர்வதேச ரீதியில் வெளியிடப்பட்ட செய்திகள், அவை கொண்டுள்ள தரவுகள் என்பன ஆராய்ந்து கவனிக்கத் தக்கன.

அமெரிக்க செய்திச் சஞ்சிகையான 'நியூஸ் வீக்' - நீ[illegible]க்குப் பின் இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பான தனது 'துயில்' கலைந்திருக்கிறது. 21.01.1985 இதழில் சிறீலங்கா அரசையும், கூடவே தமிழ் பேசும் மக்களையும் குளிர்மைப்படுத்தும் பாணியில் ஈழப் பிரச்சினை தொடர்பான ஒரு கட்டுரையை வெளியிட்டிருக்கிறது. அதில் மார்கழியில் அப்பாவித் தமிழ் பேசும் மக்கள் படுகொலை செய்யப்பட்ட விடயம் நாசூக்காக மூடி மறைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதே மாதம் தமிழ் தீவிரவாதிகளால் கொல்லப்பட்ட சிங்கள மக்களின் படம் - (இது உண்மையிலே சிறிலங்கா இராணுவத்தால் கொல்லப்பட்ட தமிழ் இளைஞர்களின் படமே) 'பிரமாத'மான முறையில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

செய்திப் பரிவர்த்தனை உலகில் படங்களுக்கு அதிக முக்கியத்துவம் உண்டு. உலக அறிஞர்கள் பலரும் செய்திப்படப் பிரசுரிப்புக்கள் எவ்வளவு பொறுப்புணர்வுடனும், உலக அமைதிக்கு உதவும் வகையிலும் அமைய வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளனர்.

ஆனால் 'நியூஸ் வீக்' திட்டமிட்ட வகையில் புகைப்படங்களையே தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான விதத்தில் பயன்படுத்தியுள்ளது.

மூன்றாம் உலகநாடுகளின் பிரச்சினைகளை நேர்மையாக ஆராயும் 'ஆபிரிக்காசியா'வின் (பிரெஞ்சு, ஆங்கிலம்) இதழ்கள் மார்கழிக் கொலைகள்பற்றி நியாயமாக எழுதி உள்ளன. இருந்தும் 'ஆபிரிக்காசியா'வின் பிரெஞ்சுப் பதிப்பும் ஆங்கிலப் பதிப்பும் கொலைகள் தொடர்பாக வெளியிட்ட தரவுகளில் வேறுபடுகின்றன.

ஆங்கிலப்பதிப்பில் எழுதியிருக்கும் SARDI EL "டிசம்பர் மாதத்தின் முதல் வாரத்தில் 200க்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் பேசும் மக்கள் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் சிறிலங்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச படையினரால் கொலை செய்யப்பட்டிருக்கின்றனர்" எனக் குறிப்பிட்டுள்ளார். இவரது தகவல்கள் ஒரு மாதத்தின் செய்வாரத்தை மட்டும் கவனத்தில் கொண்டது.

பிரெஞ்சுப் பத்திரிகையில் எழுதியிருக்கும் MARIE JOSSE-RAND - தனது கட்டுரைக்குள் 'டிசம்பர் மாதம் நடைபெற்ற சம்பவங்கள்' என்ற தலைப்பில் ஒரு பட்டியல் போட்டுள்ளார். இராணுவச் சிப்பாய்களது கொலைகளையும் உள்ளடக்கியது அவரது பட்டியல். MARIE இன் தரவுகளின்படி மார்கழி மாதம் 101 தமிழ் பொதுமக்களே கொல்லப்பட்டுள்ளனர்.

ஒரே குடும்பச் சஞ்சிகைகளின் தகவல்களில் இத்தகைய பாரிய இடைவெளி காணப்படுவது விசித்திரமானதே. இது போன்ற தரவுக் குழப்பங்கள் சிங்கள அரசாங்கச் சாதகமாக அமைந்துவிடும் வாய்ப்புக்களே பெருமளவில் உண்டு.

மார்கழிக் கொலைகள் சம்பந்தமான சரியான மதிப்பினை வெளிக்கொணர்வது இலகுவானதல்ல. அதே மாதம் காணாமல் போனவர்கள், சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டவர்கள் — இவர்களுக்கு என்ன கதி ஏற்பட்டது என்பது மர்மமே! எனினும் உறுதியாகக் கிடைத்த தரவுகளின் அடிப்படையில் 200க்கும் மேற்பட்ட அப்பாவித்தமிழ் மக்கள் மார்கழியில் அரசபடைகளினால் கொல்லப்பட்டுள்ளனர். 'தமிழ் நெடின் கணிப்பும் 205ஐத் தாண்டியுள்ளது.

தகவல்கள், தரவுகள் இவைகளில் விடும் தவறுகள் சர்வதேச ஜனநாயகத்துவத்தின் அடக்குமுறைக்கு மேலும் துணை போகக் கூடியன. எனவே, அவைகளின் மீதான அவதானம் இருபடி அதிகரிக்கப்பட வேண்டும்.

— கே.கே.மோகன் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் ஏன்? ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைச் சார்ந்தோம் - "பேரவை"

வரலாறு புரட்சிகரமான முடிவுகளை எடுக்கச் செய்வதற்கான நிர்ப்பந்தங்களைத் தோற்றுவிக்கின்றது. அதே வகையில் ஈழப் போராட்டம் தரித்து நின்ற சிக்கலான பரிமாணங்கள் ஒரு தேச விடுதலை இயக்கத்துடன் கலந்து இயங்க வேண்டிய நிலையை பேரவைக்கு ஏற்படுத்தியது. இந்தக் கட்டத்தில் இயக்கத்தை தெரிந்தெடுத்து அதனுடன் கலந்து இயங்குவதில் பேரவைக்கு அதிக சிரமம் இருக்கவில்லை.

ஏனெனில் ஒரு புரட்சிகரக் கட்சி அமைப்பு ஒன்றின் மூலம் மாத்திரம் ஈழ விடுதலை வென்றெடுக்கப்படும் என்று முற்று முழுதாக நம்புகின்ற, அதற்காக ஈழமக்களின் பல்வேறுபட்ட சக்திகளையும் இணைத்து செயற்படுகின்ற, வர்க்கப் போராட்டத்தை தேசவிடுதலைப் போராட்டத்துடன் இணைத்து முன்னெடுத்து ஒரு பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசை நிறுவுவதற்கு போராடுகின்ற ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியை இனங்கண்டு அதனுடன் கலப்பதில் பேரவைக்கு என்ன சிரமம் இருக்கமுடியும்.

ஈழப் போராட்டம் தொடர்பான ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இறுக்கமான கொள்கை, விமர்சனம் - சுயவிமர்சனம் மூலம் இயக்கத்தை நெறிப்படுத்தி கட்சி ஜனநாயகத்துக்கு இயக்கம் தரும் உயரிய மதிப்பு, காத்திரமான அமைப்பு மூலம் திட்டமிட்டு புரட்சிகர கட்சியை கட்டியமைக்கும் திட்டம், இலகுவான எளிமையான அரசியல் செயல்திட்டம், அரசியல் பிரிவுக்கு அடங்கிச் செயற்படும் ஆயுதப்பிரிவு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கத்தில் பெண்கள் வகிக்கும் முக்கியபங்கு, ஈழ விடுதலை இயக்கங்கள் தொடர்பான நேர்மான நோக்கு, ஒரு ஐக்கிய முன்னணியை அமைத்து -வலுப்படுத்துவதற்கான இயக்கத்தின் முன்னெடுப்புக்கள் அனைத்துக்கும் சோஷலிசப் புரட்சியையும், அதனது நட்பு நாடுகளையும் நண்பர்களாகக் கொண்ட இயக்கத்தின் சர்வதேச நிலைப்பாடு உலகத் தொழிலாளரையும், உலகின் ஒடுக்கப்பட்ட மக்களையும் ஒன்று சேரக் கோரும் முன்னணியின் கொள்கையும் அனைத்துமே ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியுடன் நாம் இணைவதற்கான வழியை இலகுவாக்கியது.

தொடர்ந்து ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பிரான்சுக் கிளையாகச் செயற்பட்டுவரும் பேரவை சில நடைமுறைச் சிக்கல்களால் [illegible]ப்பட்டுள்ளது. பதிவுசெய்யப்பட்ட பேரவையின் பெயர் (தமிழீழ) விடுதலைப் பேரவை தொடர்பான மாற்றங்கள் இன்னும் சில காலங்களில் உத்தியோகபூர்வ மாற்றங்களின் பின் திருத்தப்படும். தொடர்ந்து ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் போராட்ட முன்னெடுப்புக்களுக்கு துணைவருமாறு அனைத்து மக்களையும் வேண்டுகிறோம்.

---

'ஈழச்செய்தி', 'ஈழ முழக்கம்' போன்ற விடுதலை வெளியீடுகளைப் பெறுவதற்கும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பிரான்சுக் கிளை, ஈழமக்கள் செய்தித் தொடர்பு நிலையத்தின் பிரான்சுக் கிளை ஆகியவற்றுடனான சகல தொடர்புகட்குமான முகவரி

10, RUE DES MARTYRS
75009 - PARIS.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பிரான்சு

## பாதுகாப்பமைச்சின் உயர் அதிகாரி கொலை! ஐரோப்பாவில் புதுவேகம் எடுத்திருக்கும் கொரில்லா தாக்குதல்கள்!

பிரான்சின் பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரியும், சர்வதேச இராணுவத் தளபாட விற்பனைக்குப் பொறுப்பானவருமான 55 வயதுடைய பிரிகேடியர் ஜெனரல் றெனே ஓட்ரான் 'நேரடி நடவடிக்கை' இயக்கத்தின் எலிசபெத் வன் டைக் பாரிஸில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். தொடர்ச்சியாக ஐரோப்பாவின் பல்வேறு நாடுகளில் முடுக்கிவிடப்பட்டுள்ள கொரில்லா தாக்குதல்களில் இது ஒரு அம்சமாகும். இச்சம்பவத்தையடுத்து மேற்கு ஜேர்மனியில் பிரபல வர்த்தகரும், ஆயுதத் தயாரிப்பு நிறுவனம் ஒன்றின் உரிமையாளருமான ஸிம்மர்மான் என்பவர் மேற்கு ஜேர்மனியின் செம்படை இயக்கத்தால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். சிலவாரங்களுக்கு முன்னதாக பிரான்சின் 'நேரடி நடவடிக்கை' இயக்கமும் மேற்கு ஜேர்மனியின் 'செம்படை' இயக்கமும் நேட்டோவின் விஸ்தரிக்கப்பட்ட சகல தளங்கள், நிறுவனங்கள், செயல்திட்டங்கள் அனைவற்றிற்கும் எதிராக ஒருங்கிணைந்த தாக்குதல்களை நடத்துவோம் என்று அறிவித்திருந்தன. இதையடுத்து பெல்ஜியம், போர்த்துக்கல், மேற்கு ஜேர்மனி ஆகிய நாடுகளிலுள்ள நேட்டோத் தளங்கள் மேற்படி கொரில்லா இயக்கங்களால் தாக்கப்பட்டன. பெல்ஜியத்திலுள்ள அமெரிக்க இராணுவ அலுவலகக் கட்டடமும் குண்டுவீசித் தகர்க்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்கா

### ஆயுதக் குவிப்புக்களில் அமெரிக்க ஏகாதிபத்தியம்.

**Military Spending**

For fiscal years, Department of Defense military outlays, in billions of dollars.




கோரிக்கைத் தீர்மானங்களுடன் தனது இரண்டாவது பதவிக் காலத்துக்கான பதவியேற்பு வைபவத்தினை சினிமாப் பாணியில் மேற்கொண்ட அமெரிக்க ஜனாதிபதி றேகன் உலகமெங்கும் போர் அபாயத்தை விளைவிக்கும் ஆயுதத் தயாரிப்பு- ஆயுதக் குவிப்பு ஆகிய தமது 'திருப்பணி'களை கட்டவிழ்த்து விட்டுள்ளான். உலக சமாதானத்தின் முதல் எதிரியான றேகனது அரசு 1985ம் ஆண்டுக்கான இராணுவச் செலவீடாக 246.5 பில்லியன் டொலர்களை ஒதுக்கியுள்ளது. இந்த எண்ணிக்கை 1980ம் ஆண்டில் 132.8 பில்லியன் டொலர்களாக மட்டுமே இருந்தது. இந்த பூமியின் மேற்பரப்பில் போர் அபாயத்தை விளைவித்தது போதாது என்று வானமண்டலத்தில் போரை மேற்கொள்வதற்கான போர்க் கருவிகள் தயாரிப்பதற்கும் றேகன் நிர்வாகம் பெருந்தொகை பணத்தை ஒதுக்கியுள்ளது.

## சோவியத் யூனியன்.

### சோவியத்தில் பொருட்களின் விலைகள் குறைகின்றன.

முதலாளித்துவ நாடுகளில் விலைவாசி உயர்வும் பணவீக்கமும் மக்களின் கழுத்துக்களை நெரிக்கும் இந்த வேளையிலே சோவியத் யூனியனில் தொடர்ச்சியாகப் பாவனைப் பொருட்களின் விலைகள் குறைந்து வருகின்றன. கடந்த இருவருடங்களில் பாவனைப் பொருட்களின் விலைகள் சோவியத் யூனியனில் ஆறு தடவைகள் குறைக்கப்பட்டுள்ளன. இங்கு பாவனைப் பண்டங்களின் விலைகள் குறைந்து வரும் அதே வேளையில் உணவுப் பண்டங்களின் விலைகள் நிலையாக உள்ளன என்பதும் மக்களின் மொத்தவருமானம் மேலும் மேலும் அதிகரித்து வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிக்கரகுவா.



UPI

**Daniel Ortega Saavedra**

## நிக்கரகுவாவின் ஜனாதிபதியாக டானியல் ஓட்டேகா பதவியேற்பு!

மக்களால் தெரிவு செய்யப்பட்ட நிக்கரகுவாவின் முதலாவது ஜனாதிபதியான டானியல் ஓட்டேகா எளிமையான நடைபெற்ற பதவியேற்பு வைபவம் ஒன்றில் ஜனவரி-10ம் திகதி பதவியேற்றார். இவ் வைபவத்தில் கியூபா ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோவும் கலந்து கொண்டார். மேற்படி பதவியேற்பை அடுத்து ஜனாதிபதி ஓட்டேகா அளித்த முதலாவது பேட்டியொன்றில் அமெரிக்காவுடன் சுமுகமான உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள தமது நாடு தயாராக இருப்பதாகவும் ஆனால் இந்த விருப்பத்திற்கு மூன்று நிபந்தனைகள் அமெரிக்காவினால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்றும் ஓட்டேகா வற்புறுத்தினார். முதலாவது ஸான்டினிஸ்தியப் புரட்சிகர அரசை வீழ்த்துவதற்கு எதிர்ப்புரட்சி நடவடிக்கை செய்பவர்களுக்கான அமெரிக்க உதவிகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இரண்டாவது நிக்கரகுவாவுடனான பிரச்சினைக்கு அமெரிக்கா பேச்சுவார்த்தைகளின் மூலமே தீர்வு காண முயல வேண்டும். இராணுவ நடவடிக்கைகளால் எவ்வித பிரயோசனமுமே இல்லை. மூன்றாவதாக அமெரிக்கா நிக்கரகுவா தொடர்பானதும், மத்திய அமெரிக்க நாடுகள் தொடர்பானதுமான தனது ஏகாதிபத்தியக் கொள்கைகளையும், நடவடிக்கைகளையும் கைவிட வேண்டும். அவர் மேலும் பேட்டியளிக்கையில் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான எவரையும் இன்று அமெரிக்கா தனது எதிரிகளாகக் கருதுவதாகவும் அமெரிக்காவிடம் வேண்டுவது ஒன்றைத்தான் எம்மை நீங்கள் மதியுங்கள் எம்மீது ஏறிச் சவாரி செய்து எமது விடயங்களில் தலையிட முயலாதீர்கள். உங்களுக்கு அபிப்பிராயங்கள் இருக்கலாம். நீங்கள் எம்மை விமர்சிக்கலாம். ஆனால் உங்கள் அபிப்பிராயங்களை எம்மீது திணிக்கும் அதிகாரம் உங்களுக்குக் கிடையாது" என்றும் ஓட்டேகா கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியா.

### 'இலங்கை இனப்பிரச்சினை தீர எம்மால் இயன்ற அனைத்தையும் செய்வோம்' - ராஜீவ் காந்தி.

"இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு ஒன்றைக் காண்பதில் இந்தியாவின் நல்லெண்ண முயற்சிகளின் ஒரு பகுதியாக இந்தியா இலங்கையிடமிருந்து உயர்மட்டத் தொடர்பை எதிர்பார்த்திருக்கிறது. இலங்கையிலிருந்து பெருமளவு அகதிகள் இந்தியாவுக்கு அடைக்கலம் தேடிவந்திருப்பதாலும், அவர்கள் கண்ணியத்துடனும் அச்சமின்றியும் திரும்பிச் செல்லும் நிலை ஏற்படுத்தப்பட வேண்டியிருப்பதாலும் நாம் அவர்களுக்கு உதவ வேண்டியிருக்கிறது. இனப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டிய அனைத்துக் கட்சி மாநாடு எத்தகைய தீர்வுமின்றி முடிவடைந்த விதம் ஏமாற்றத்தைத் தந்துள்ளது" இவ்வாறு இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி லோகசபையில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார். மேலும் அவர் தனது உரையில் இலங்கை தனது பாதுகாப்புப் படையினரை பயன்படுத்தும் தன்மை குறித்து தனது மகிழ்ச்சியின்மையை வெளிப்படுத்தியதுடன்... "இலங்கையில் பாதுகாப்புப் படையினரால் தமிழ்ப்பொதுமக்கள் கொல்லப்படுவதாக தினமும் அறிக்கைகள் வந்தவண்ணம் உள்ளன. இலங்கையின் வடக்கு, கிழக்கில் குடியேறிய இந்திய வம்சாவளித் தமிழர்கள் பலர் பாதிக்கப்பட்டவர்களாகவே உள்ளனர் என்றும் கூறியுள்ளார்.

### இலங்கைத் தமிழர் அவலநிலை பற்றி இந்திய லோக சபையில் கவனஈர்ப்புத் தீர்மானம்!

இந்திய லோகசபையில் இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள அவலநிலை பற்றிய கவனஈர்ப்புத் தீர்மானம் இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் திரு. பிரிய ரஞ்சன்தாஸ் முன்ஷியும் வேறு சில உறுப்பினர்களும் கவனஈர்ப்புத் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவந்தனர். இலங்கையில் மீண்டும் நடந்ததாகச் சொல்லப்படும் வன்முறைகளில் இலங்கைத் தமிழர்களின் உயிர்களுக்கும், உடமைகளுக்கும் நேர்ந்த இழப்பையும் இந்தியக் கடற்பகுதிக்குள் அத்துமீறிப் பிரவேசித்து இந்திய மீனவர்கள் மீது இலங்கை கடற்படை ரோந்துப்படை தாக்குதல் நடத்திய சம்பவத்தையும் அத்தீர்மானம் கவனத்துக்கு கொண்டுவந்தது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அடுத்த ஐந்து ஆண்டுகளில் எண்ணெய் சுய தேவையில் இந்தியா தன்னிறைவு.

இந்தியா தனக்குத் தேவையான எண்ணெய் அனைத்தையும் 1990ம் ஆண்டளவில் உற்பத்தி செய்யத் திட்டமிட்டிருப்பதாக அறிக்கைகள் கூறுகின்றன. நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியா தனக்குத் தேவையான எண்ணெயில் மூன்றில் இரண்டு பகுதியை இறக்குமதி செய்தது குறிப்பிடத்தக்கது. இத் தன்னிறைவு இந்தியப் பொருளாதாரத்தை சுபிட்சமான எதிர்காலத்தை நோக்கி இட்டுச் செல்ல வல்லது.

## காஷ்மீர் எல்லை மோதல்களில் 50 பாக். வீரர்கள் கொல்லப்பட்டனர்.

காஷ்மீர் எல்லையில் நடைபெற்ற பல மோதல்களில் 50க்கும் மேற்பட்ட பாகிஸ்தான் துருப்புக்கள் கொல்லப்பட்டுள்ளனர். அநேகர் படுகாயமடைந்தும் உள்ளனர். காஷ்மீர் பிரதேசத்திலுள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பனிமலைப் பிரதேசத்தைக் கைப்பற்றும் பாகிஸ்தான் துருப்புக்களின் முயற்சியை இந்தியத் துருப்புக்கள் வெற்றிகரமாகத் தோற்கடித்துள்ளன என்றும் மேலும் தலைமை இந்திய இராணுவத் தளபதிகளில் ஒருவரான லெப்டினன்ட் ஜெனரல் எம்.எல்.துப்பர் தெரிவித்துள்ளார்.

## இடைத் தேர்தல்களில் தி.மு.க.வுக்கு வெற்றி!

இந்திராவைக்கப்பட்டு பின்னர் சமீபத்தில் நடைபெற்ற இடைத்தேர்தல்களில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வெற்றி கிட்டியுள்ளது. லோகசபைக்கான வடசென்னை தொகுதியில் தி.மு.க. வேட்பாளரான என்.வி.என். சோமுவும், எழும்பூர், பெரம்பூர் சட்டசபைத் தொகுதிகளில் எஸ். பாலன், பரிதி இளம்வழுதி ஆகிய தி.மு.க. வேட்பாளர்களும் வெற்றி பெற்றுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துப்பாக்கிகள் எதிரியை நோக்கி மாத்திரம் திரும்பட்டும்



சிந்தனையற்றோர் நிகழ்த்திய வெறியாட்டத்தின் இரத்தசாட்சிகள். கொல்லப்பட்ட விடுதலைப் புலிகள் சிதையில்.

---

சுழிபுரத்தில் ஆறு விடுதலைப் புலிகளின் இளம் வீரர்களை கொடூரமாக சித்திரவதைசெய்யப்பட்டு வெட்டிச் சாய்க்கப்பட்ட கொடிய சம்பவம் தொடர்பாக தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் பொறுப்பாளியாகியுள்ளது. மிலேச்சத்தனமாக நடந்த இக்கொலைகள் கண்டிக்கப்பட வேண்டியவை. கொலையாளர்கள் ஈழமக்களுக்கு இனங்காட்டப்பட வேண்டியவர்கள். எழுத்திலும், பேச்சிலும் ஐக்கியத்தையும் நடைமுறையில் இத்தகைய வெறியாட்டத்தையும் கொண்ட செயல்முறைகளை தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் திருந்தி நடந்த சம்பவத்திற்கு ஈழமக்களிடம் பொது மன்னிப்புக் கோரவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ விடியற் காலத்து நட்சத்திரம் லெனின் ★

சென்ற இதழின் தொடர்ச்சி....

புரட்சி அலைகள் வரவர அதிகரித்தன. ருசியா முழுவதும் வேலைநிறுத்தங்களும் போராட்டங்களும் வரப் பெற்றன. 1905ம் ஆண்டு ஆரம்பத்தில் தாயகம் திரும்பி கட்சிக்கும், புரட்சிப் போராட்டத்திற்கும் லெனின் நேரடியாகத் தலைமை தாங்கினார். சுமார் 2½ ஆண்டுகாலம் நீடித்த முதற் புரட்சிப் போராட்டம் தோல்வியடைந்தது. ஏக்கம் நிறைந்த, முற்றிலும் ஒளியற்றுப் போன பிற்போக்கு ஆண்டுகளில் பாட்டாளி வர்க்கத்தின் வெற்றியைக் குறித்து எண்ணமிட்டவாறே லெனின் வாழ்ந்தார். 1908ம் ஆண்டு இறுதியில் அந்நாட்களில் நாடு கடந்த ருசியர்களின் மையமாக விளங்கிய பாரிசுக்கு வந்து சேர்ந்தார். <மரீ ரோஸ் வீதி 4ம் எண் வீட்டில் அவர்கள் வசித்த பகுதி இப்போது வி.இ.லெனின் காட்சிச் சாலையாக இருக்கிறது> லெனின் மிகவும் எளிமையான வாழ்க்கையை நடத்தினார். சாதாரண உடைகளையும் வசதிகளையும் கொண்டு திருப்தியடைந்தார். ஒருமுறை தனது தோழருக்கு எழுதிய கடிதத்தில் 'என் சொந்த விடயம்பற்றி எழுதுகிறேன். வருமானம் இல்லாவிட்டால் வெறுமனே செத்து மடிய வேண்டியதுதான்... விலைவாசிகள் அநியாயமாக ஏறி இருக்கின்றன. குடும்ப சீவியத்திற்கு வழியில்லை' என எழுதினார்.

மனிதகுலம் பிரவேசித்த இந்த புதிய சகாப்தத்தின் சாராம்சத்தை துலக்கிக் காட்டிய முதலாவது மார்க்சியவாதி லெனின்தான். இறுதியில் முதலாளித்துவம் தனது வளர்ச்சியின் புதிய கட்டத்தில்... ஏகாதிபத்தியத்தில் பிரவேசித்துவிட்டது என "ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சக்கட்டம்" என்ற நூலில் எழுதினார். சுமார் 10 ஆண்டுகள் வெளிநாடுகளில் வாழ்ந்தபின் 1917ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17ம்திகதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் தாயகம் திரும்பினார். ஆயிரக் கணக்கான ஆண், பெண் தொழிலாளர்களின் செங்கொடிகளுடன் கரகோஷங்கள் முழங்க லெனின் வரவேற்கப்பட்டார். அப்போது ஆட்சியிலிருந்த தற்காலிக அரசாங்கத்துக்கு ஆதரவு இல்லை. ஒரு அதிகாரமும் சோவியத் மக்களுக்கே என்ற கோஷங்களை முன்வைத்தார். கட்சியின் மத்திய குழுவிற்கும், 'பிராவ்தா' பத்திரிகையின் ஆசிரியர் குழுவிற்கும் தலைமை தாங்கி வழிநடத்தினார். தொழிலாளர் இருப்பிடங்களில் மறைந்து கொண்டே கட்சியையும் போராட்டத்தையும் தொடர்ந்து நாள்தோறும் தலைமை தாங்கி நடத்தினார். இந்த நாட்களில்தான் 'அரசும் புரட்சியும்' என்ற நூலை வெளியிட்டார். மார்க்ஸ், ஏங்கல்ஸ் ஆகிய இருவரது கருத்துக்களை விரிவுபடுத்தி சோசலிசம் தவிர்க்க முடியாதவாறு கம்யூனிசமாக மாறும் என அதி விரிவாக விளக்கியது அந்நூல். நாட்டு நிலைமை மேலும் மேலும் இறுக்கமாகிக் கொண்டு வந்தது. நெருக்கடிகள் அதிகரித்தன. லெனின் மாறுவேடத்தில் பின்லாந்து போய்ச் சேர்ந்தார்.

அங்கிருந்து அக்டோபர் 7ம் திகதி ஆயுதம் தாங்கிய போராட்டத்தை தலைமை தாங்கி நடத்தும் பொருட்டு நாட்டுக்கு வந்து சேர்ந்தார். நிர்ணயமாக நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு நிலைமை வந்துவிட்டது என்றும் தாமதம் செய்வது சாவுக்கு ஒப்பாகும் என்றும் வலியுறுத்தினார். எழுச்சி கச்சிதமாக இராணுவக் கலையின் நியமங்களுக்கு ஒத்தும் இணங்க லெனினுடைய கட்டளைக்கு முழுவதும் ஏற்ப நடந்தேறியது. அக்டோபர் 25, 26 நள்ளிரவில் தற்காலிக அரசாங்க மந்திரிகள் இருந்த குளிர்கால அரண்மனையை உடனே தாக்குமாறு லெனின் கட்டளையிட்டார். புரட்சிப்படைகள் திடீரெனத் தாக்கி அரண்மனையைக் கைப்பற்றின. பூர்சுவா அரசாங்கத்தின் கடைசி அரண் விழுந்து விட்டது. வி.இ. லெனினால் தலைமை வகிக்கப்பட்டு வழிநடத்தப்பட்ட போல்சுவிக்கிக் கட்சி இவ்வாறு ருஷ்யாவின் மக்களை மாபெரும் வெற்றிக்கு இட்டுச் சென்றது. மனிதகுல வரலாற்றில் முதன் முறையாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை நிலைநாட்டியது. இந்த வெற்றி ஏற்பட்ட நாள் முதல் மனிதகுல வரலாற்றில் புதிய அத்தியாயம் தொடங்கிவிட்டது. ஏகாதிபத்தியம் தகர்ந்து சிதறியும், சோசலிசமும் கம்யூனிசமும் வெற்றிவாகை சூடும் புதிய சகாப்தம் விளங்கத் தொடங்கிவிட்டது.

புதிய சோவியத்தைக் கட்டியெழுப்புவதற்கு லெனின் ஓய்வு ஒழிவின்றி, அசாதாரணமாக பன்முக வேலைகளில் மூழ்கியிருந்தார். ஏகாதிபத்தியவாதிகளின் உத்தரவுப்படி அவர்களிடம் பணம் பெற்றுக் கொண்டு உள்நாட்டு எதிர்ப்புரட்சியாளர்கள் சோவியத் அரசிற்கெதிராக சூழ்ச்சி செய்தார்கள். லெனினையும் அவரது தோழர்களையும் கொலை செய்ய ஏற்பாடு செய்தார்கள். 1918ம் ஆண்டு கப்பளான் என்பவள் லெனினைக் கொடிய முறையில் தாக்கி ரிவால்வரால் சுட்டுக் காயப்படுத்தினள். லெனினுடைய உயிருக்கே மரண அபாயம் நேர்ந்தது குறித்துக் கவலைப்பட்டார்கள். கட்சியும், நாடு முழுவதும் தங்கள் தலைவரின் உடல்நிலையை ஆழ்ந்து கவனித்தார்கள். லெனின் குணமடையத் தொடங்கியதும் மக்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. சோவியத் ஆட்சியை வலுப்படுத்துவதற்கும், அந்நிய தலையீட்டாளர்களையும் வெண்படை வீரர்களையும் எதிர்த்துப் போராடுவதற்கும், விவசாயங்களில் கம்யூனிச முறைகளைப் போதிப்பதற்கும் லெனின் தனது சக்தி முழுவதையும் அர்ப்பணித்தார். 1918ம் ஆண்டு அக்டோபரில் எழுதிய "பாட்டாளி வர்க்கப் புரட்சியும் கொள்கை மாறிய காவுத்ஸ்கி" என்ற நூல் சந்தர்ப்பவாதத்திற்கு பெருத்த அடியாக இருந்தது.

லெனின் மார்க்சியத்தின் கூறுகளான தத்துவஞானம், அரசியல், பொருளாதாரம் ஆகிய மூன்று கூறுகளையும் வளர்த்து பாட்டாளிவர்க்கத்தின் ஆட்சியை நிலைநிறுத்தினர். லெனின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1923ம் ஆண்டு மார்ச் மாதம் மிகவும் கடுமையாக நோய்வாய்ப்பட்டார். நோய்வாய்ப்பட்ட நிலையிலும் மக்களுக்காகக் கடுமையாக உழைத்தார். 1924ம் ஆண்டு ஜனவரி மாதம் 21ம் திகதி மாலை 6 மணி 50 நிமிடத்தில் மூளையில் இரத்த நாளம் வெடித்ததன் விளைவாக லெனினது உயிர் பிரிந்தது. "எவரது போராட்ட உக்கிரமிக்க தலைமையில் நமது கட்சி வெற்றிபெற்று புகையால் சூழப்பட்ட நாடு முழுவதும் அக்டோபர் செங்கொடியை அதிகாரத்தால் காட்டி பகைவர்களின் எதிர்ப்பை முறியடித்து ஆட்சியைத் தூக்கியெறிந்து ரஷ்யாவில் உழைப்பாளி மக்களின் ஆட்சியை நிலையாக ஸ்தாபித்தாரோ அந்த மனிதன் மறைந்தார். கம்யூனிஸ்ட் அகிலத்தின் ஸ்தாபகர், உலகக் கம்யூனிசத்தின் தலைவர், பாட்டாளி வர்க்கத்தின் அன்பு, அதன் பெருமை, ஒடுக்கப்பட்ட கிழக்கின் பதாகை, ரஷ்யாவின் தொழிலாளர் சர்வாதிகாரத்தின் தலைவன் மறைந்தார்" என கட்சியின் மத்திய குழு சோகம் பொங்க லெனினின் மறைவை மக்களுக்கு அறிவித்தது.

உழைக்கும் மக்களின் நலன்கள், மகிழ்ச்சி கவலைகளுக்காக நடைபெற்ற போராட்டத்தில் தன்னுடைய முழுப்பலத்தையும், மேதாவிலாசத்தையும் லெனின் மீது மக்களனைவர் எல்லையற்ற அன்பு கொண்டிருக்கிறார்கள். அவருடைய பெயர் சோசலிசத்திற்கும், வர்க்கப்புரட்சிக்கும், முன்னேற்றத்திற்கும் சின்னமாகிவிட்டது. லெனினுடைய பெயரும், அவருடைய மகத்தான லட்சியமும் போதனையும் அழியாதவை. பல நூற்றாண்டு காலத்திற்கு அவை நிலைத்து இருக்கும். அந்த இருண்ட காலத்தில் எடுத்த ஒளி இன்னும் விடுதலை வேண்டிநிற்கும் மக்களுக்கு விடியற்காலத்து நட்சத்திரமாக இருக்கிறது.

- முற்றும் -

- செல்வம் -

* சென்ற இதழில் இக்கட்டுரையில் 1985 என்று இடம்பெற்றவைகள் குறிக்கப்பட்ட ஆண்டுகளை 1895 என [illegible] வேண்டும் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தொலைபேசி செய்தித் தொடர்புச் சேவை

பிரான்சு வாழ் ஈழ மக்களுக்கு!

ஈழத்தில் சிறீலங்கா அரசின் படுகொலைகளும் பாதகச் செயல்களும் இரத்த வெள்ளமாகப் பெருக்கெடுத்துள்ள இவ்வேளையிலே இக்கொடுமைகளுக்குள் சிக்கி வாழ்ந்து கொண்டிருக்கும் ஈழ மக்கள் பற்றியும், ஈழத்தின் நிலை பற்றியும் அறியாது கலங்கித் தவித்திருக்கும் நிலையை தணிக்கும் வகையில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செய்திப் பிரிவான ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலையத்தின் பிரான்சுக் கிளை தொலைபேசிச் செய்தித்தொடர்புச் சேவை ஒன்றினை ஆரம்பித்துள்ளது. **1.02.1985** முதல் ஆரம்பமாகும் இச் சேவையினோடு தொடர்பு கொள்வதற்கான தொலைபேசி இலக்கம் **874 60 43** இச் சேவை 24 மணி நேரமும் இயங்கும்.

ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிறுவனம்
பிரான்சுக் கிளை
10, RUE DES MARTYRS
75009 PARIS

**EPIC**




வெளியீடு: தமிழ் ஈழ விடுதலைப் பேரவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TAMOUL MURASU

UNISSEZ VOUS TOUS LES TRAVAILLEURS ET LES NATIONS OPPRIMEES

MURASU - 3 OLY - 4


FEVRIER - 1985



**Patrouille dans le nord de l'ile**
*La vengeance militaire des Cinghalais*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# EDITORIAL




## *REVOYEZ L'EX-PARADIS SRILANKAIS*

*Multiple façons existent pour supprimer la lutte pour la libération; le gouvernement Srilankais applique toutes les méthodes existantes dans le but de supprimer la lutte du peuple Tamoul en Srilanka.*

*A l'heure actuelle les Tamouls de Srilanka comptent parmi les peuples opprimés et non-assistés existants dans le monde.*

*Pendant que la pauvreté et la faim tuent le peuple en Afrique, le gouvernement fasciste de Srilanka crée une méthode artificièlle de suppression des Tamouls, sur les territoires dits Tamouls; en plus il emploi une nouvelle méthode pour tuer des gens sur tout des Tamouls.*

*Maintenant, non seulement que le droit fondamental des Tamouls leur est privé mais aussi les moyens nécessaires pour survivre leurs sont interdits. La circulation de nouritures est bloquée en destination de la région du nord de l'île. Ainsi c'est créée des zônes. Zône de sécurité pour les Tamouls et zône interdite pour les Tamouls comme les régions cotières du nord d'où le handicap d'y aller pêcher en mer, d'où la paralysie de l'industrie de la pêche. La population habitant la zône déclarée zône de sécurité ne pouvait quitter le pays sans autorisation écrite d'autorité compétente. A peu près 100 individus sont morts de faim à cause de manquement de nourritures.*

*De l'autre côté, chaque jour l'armée tue les innocents Tamouls, pendant que le gouvernement prétend que c'est pour écarter les terrorisme du pays. En même temps les bandits Singhalais tenus par le gouvernement, armés, attaquent les Tamouls et en particulier ceux de Trincomalee, Mulaitivu et Vavuniya.*

*Dans cette circonstance, nous les Tamouls opprimés, en combattant pour notre droit fondamental, demande au peuple du monde entier qui respect les droits de l'homme, de bien vouloir nous aider dans notre lutte pour notre légitimité. Tournez votre regard et votre attention sur l'île sanglante dans l'océan Indien.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## LA MARINE SRILANKAISE APPREHENDE AVEC 6 MARINS ET DETENUS EN INDE

Un bateau de patrouille de la marine nationale a été arrêté par la marine Indienne le 11 janvier 1985 dans les eaux territoriales d'Inde. Le bateau Srilankais a été conduit avec son bord le lieutenant et 6 marines. Ils ont été détenus par les autorités Indiennes.

La marine indienne trouvait a bord du bateau Srilankais 150 Kg de crustaceans et il a été dit que ces crustaceans ont été prises des pêcheurs indiens. Ce-ci est une preuve que pouvant prendre les produits de pêche des pêcheurs Indiens, la marine Srilankaise pouvait sans craindre prendre les produits de pêche des pêcheurs Srilankais dans la région du nord du pays.


Il est a rappeler que l'industrie de pêche est paralysé dans le nord du pays et surtout dans les zônes dit interdites. Et maintenant la marine Srilankaise pénétrait dans les eaux territoires Indiens, celle-ci commet la même erreur.

Après cette arrêstation la marine Srilankaise a arrêté a son tour 17 pêcheurs indiens et les met sous arrêt. Le gouvernement de Srilankais demande la libération inconditionelle des marines detenus, mais le gouvernement indien refuse cette demande. Après avoir fait l'entretien d'haute fonctionnaire de deux pays, le gouvernement de l'inde avait liberé les marines.

**POUR TOUTES LES CORROSPONDANCES**

L'EDITEUR<br>
TAMOUL MURASU<br>
CONSEIL DE LA LIBERATION DE TAMOUL EELAM<br>
10,RUE DES MARTYRS<br>
75009-PARIS<br>
FRANCE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## 10 000 PERSONNES ONT ETE CHASSEES DE LA REGION COTIERE DE MULLAITIVU PAR L'ARMEE

L'armée attaque les civils dans les villages comme Kokilai, Kokuthoduvai, Kumulamunai, Semmalai, Alambil et Nayaru. Ce geste a commencé depuis la création de la zône interdite en decembre 1984. Durant l'opération de l'armée 24 personnes ont perdu la vie et 6 femmes ont été enlevées. Plus que 10 000 personnes ont été chassées de leurs maison, ou ils trouverent leurs réfuges dans les églises ou bien des écoles.

Le gouvernement délasse les villages et ne favorise pas la bonne circulation des nourritures et des villages tendent à disparaître à cause de la faim.

Cependant, le ministre de la sécurité nationale, M.Athulad Mudali interdit toutes réinstallations des

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

personnes chassées, jusqu'à ce que les colonnies singhalaises ne soient pas en place en les fournissant les armes.

Le gouvernement Srilankais introduit 250 singhalais dans chaque circonscription electorale en les armant dans le but de s'emplanter dans les territoires Tamouls.

Le gouvernement de Srilanka envoit de plus en plus de brigades militaires et arme les bandits singhalais dans le but d'exterminer le peuple tamoul ainsi que leur lutte pour libération.

## 14 INNOCENTS TAMOULS Y COMPRIS DEUX MENAGES TUES PAR L'ARMEE A MULLAITIVU

14 innocents tamouls ont été tués par l'armée le 16 janvier 1985 à Mullaitivu dans le département de Mullaitivu. Dans cet assassinat ont peri deux ménages en laissant 6 enfants derrière eux. Ces 6 enfants sont devenus orphelins. Deux frères, un père de la même famille, ainsi qu'un garçon de 14 ans d'une autre famille ont été tués par l'armée. Leurs noms sont ci-dessous:

1ère famille: Suppan Sinnavan et sa femme S.Annaluxmy.
2ème famille: Sellathurai Kumaresu(40 ans) et sa femme Nithiyakumary(30 ans).
3ème famille: Thambiah Balasubramaniam et son frère Thambiah Vivekanandan.
4ème famille: Sellathurai Navaratnam(37 ans) et son fils Thayaparan(14 ans).

L'epouse du 1er victime Mme.Annaluxmy dont le corps a été trouvé dans sa maison incendié; selon l'autopsie, elle était enceinte de 8 mois.

Le gouvernement de Srilanka approuve et encourage l'opération menée par l'armée et il annonce toujours qu'il y a des terroristes tués.

Le gouvernement a l'intention de chasser les tamouls de leurs territoires en les handicapant par les moyens économic ou bien social.

Il est à rappeler que 10 000 tamouls sont transférés des côtés de Mullaitivu par l'armée et ils ont l'intention d'installer à la place de 10 000 tamouls les bandits singhalais armés.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## L'ECHEC DE LA CONFERENCE DE TOUS LES PARTIS

Le président de Srilanka J.R.Jeyawardene a tenue une conférénce de tous partis politiques pour une période d'une année, dans le but de trouver une solution nationale pour le peuple Tamoul. Il a proposé un Conseil Régional et une deuxième chambre pour résoudre les problèmes Tamouls. Le leader du Front Uni pour la Libération des Tamouls Mr.A.Amirthalingam déclara que ces nouvelles propositions ne résolvent pas les problèmes Tamouls.

L'association Singhalaise Boudhisme pressait le président J.R.Jeyawardene d'avancer ces propositions. A cause de cette pression, J.R.Jeyawardene annonçait que nouvelles propositions auront lieu après la conférence de tous les partis politiques. La conférence de tous les partis n'a pas eu un aboutissement car les autres partis ne voulaient pas deliberer avec le Front National tant qu'il n'abondonne pas leur idée d'un état séparé.

## PRETRE CATHOLIQUE ET 9 AUTRES PERSONNES ONT ETE TUES PAR L'ARMEE A MANNAR

Le 6 janvier, 1985 Prêtre Catholique Père Mary Bastian et 9 autres personnes ont été tués par l'armée à Vankalai à la mission catholique de Mannar. Les leaders Tamouls et la mission chrétienne desapprouvent cet acte barbare de la part du gouvernement. L'armée Srilankaise ne fait que tuer, pillier et humilier la population Tamoule. Les corps des personnes tués ont été laissés sur place, mais celui du prêtre a été emmené par eux. Le gouvernement Srilankais annonçait qu'il y avait 10 terroristes qui ont été tués pendant l'opération menée pour l'armée. Il est à noter que dans cette tuerie une dame de 74 ans figure parmis les 10 tués.

Cependant, le Cardinal de Mannar M.Thomas Savundaranayagam dans une déclaration publique déclare:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"Nous déplorons la disparition du prêtre catholique Père Fr.Mary Bastian prête de la paroisse de Vankalai dans les heures du Dimanche dans la matinée du 6 à la Mission de Vankalai, tué par les forces de sécurité.*


*"Père M.Bastian âgé alors de 38 ans, un travailleur bien noté sur le plan des travaux de la paroisse, a été entrainé et melé en faisant son mieux d'améliorer les pauvres gens appartenant à la diocèse de Mannar. Les Catholiques de Mannar et moi regrettent l'acte cruel et inhumain contre un homme de Dieu.*

*"Nous protestons avec véhémence contre les nouvelles diffusées par le radio national de Srilanka ainsi qu'autres moyens gouvernementaux de masse-média car ceux-ci diffusent des fausses nouvelles disant que l'église Catholique de Vankalai détient des armes et des munitions et que cette église serve en tant que base d'attaque, contre les forces de sécurité.*

*"Nous condamnons aussi la tuerie des civils innocents dans le village de Vankalai. Nous protestons contre les entrées non autoritées dans le couvent des soeurs de la sainte famille de Vankalai exercées par les forces de sécurité.*

*"Les Catholiques de Mannar et moi ensemble avec mes prêtres, nous réclusons toutes formes de violence quelle qu'elle soit, et demande sincièrement aux gouvernements de bien vouloir proteger la vie et les propriétés des citoyens innocents de Mannar. Nous sommes dans la crainte que ce sort d'acte pourrait devenir pire et nous demandons au Président de la République de bien veiller pour que ce gendre d'acte ne reproduit plus".*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




PUBLIE PAR

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CONSEIL DE LA LIBERATION DE TAMOUL EELAM (FRANCE)